**சென்னை-6, கூடுதல் தொழிலாளர் ஆணையரின் (நிர்வாகம்)**
**செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் : திருமதி சி. ஹேமலதா, எம்.ஏ., எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ.,**

**சுருக்கம்**

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செயயப்பட்டு, சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

ஜி3/21971/2023

நாள்: 13.12.2023

படிக்கப்பட்டது;

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 1955/PSD-D2/2023, நாள். 23.08.2023.
2. சென்னை, முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். ஜி3/21971/2023-1, நாள். 13.09.2023.

******

<u>ஆணை :</u>

மேலே 1ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களில் மேலே 2-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்த கீழ்க்கண்ட பட்டியலில் கலம் 2-ல் உள்ள தெரிவாளர்களது தெரிவினை உறுதி செய்யப்பட்டதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளதால், அவர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் கலம் 4ல் உள்ளவாறு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | தெரிவாளர்களின் பெயர் (திருவாளர்கள்) | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறைப் படுத்தப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | சு. சுருதி | 20.09.2023 முற்பகல் | 20.09.2023 முற்பகல் |
| 2 | ம. மல்லிகைச்சரம் | 20.09.2023 முற்பகல் | 20.09.2023 முற்பகல் |
| 3 | பா. குருசுதாகரன் | 20.09.2023 முற்பகல் | 20.09.2023 முற்பகல் |
| 4 | க. சரவணகுமார் | 25.09.2023 முற்பகல் | 25.09.2023 முற்பகல் |

தெரிவர்களது பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள்-IVல்

அடங்கிய தெரிவுகளுக்கு எதிராக நிலுவையில் உள்ள ரிட்மனுக்களின் இறுதித் தீர்ப்பிற்குட்பட்டது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination– IV (Group IV)"

மேற்படி பட்டியலில் உள்ள இளநிலை உதவியாளர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 32–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்முதல் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

இத்தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு விதிகளின் கீழான விதி 34(a) உடன்பிற்சேர்க்கை (V)ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பணியில் சேர்ந்த இரண்டு வருடங்களுக்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே தங்களது தகுதிகாண் பருவத்தைப் பூர்த்தி செய்ய இயலும் எனவும், போதுமான தமிழ் மொழித்திறன் பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பணியாளர்கள் அடுத்த பதவி உயர்விற்கு செல்ல 1. சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்–1, 2. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை தேர்வு பகுதி–அ மற்றும் 3. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை தேர்வு பகுதி–ஆ ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– சி. ஹேமலதா,
கூடுதல் தொழிலாளர் ஆணையர்
(நிர்வாகம்)

பெறுநர்
கலம் 2–ல் காணும் பணியாளர்கள்,
இவ்வலுவலகம்.

நகல்:
1. இவ்வலுவலக ஜி4 இருக்கை.
2. பணிப்பதிவேடு / உதிரி.

//அனுப்பப்படுகிறது//

கூடுதல் தொழிலாளர் ஆணையருக்காக
(நிர்வாகம்)

14.12.2023